முரசொலியில் 'சிலந்தி' எனும் பெயரில் எழுதி

# திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பியவர் முரசொலி செல்வம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை இரங்கல்!



சென்னை, அக்.12-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும், முரசொலி மாறனின் சகோதரருமான முரசொலி செல்வம் அவர்கள் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மைத்துனரான முரசொலி செல்வம் நல்ல சிந்தனை யாளர், எழுத்தாளர், திரைப்பட தயாரிப்பாளர். முரசொலி நாளேட்டில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர் பொறுப்பிலிருந்து திறம்பட பணியாற்றியவர். எதிலும் தன்னை முன்னி லைப்படுத்தாமல் ஆக்கப்பூர்வமான பணிகளை செய்து வந்தவர்.

முரசொலியில் 'சிலந்தி' என்ற புனைப் பெயரில் அரசியல் கட்டுரைகளை எழுதி, திராவிட இயக்க கொள்கைகளை பரப்பியவர். முரசொலிக்கு எதிரான ஆட்சியாளர்களின் அடக்குமுறையையும், வழக்குகளையும் துணிவுடன் எதிர்கொண்டவர்.

முரசொலி செல்வம் அவர்களது மறைவு திராவிட முன்னேற்ற கழகத்திற்கும், முரசொலி நாளேட்டிற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

முரசொலி செல்வம் அவர்களின் மறைவினால் துயருறும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், தி.மு. கழக நண்பர்கள் மற்றும் முரசொலி ஆசிரியர் குழுவினர் மற்றும் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மகத்தான மனிதநேயப் பண்பாளர்!



எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பரிவு; எந்தப் பிரச்சினை ஆனாலும், அதன் இருட்டை விலக்கி அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், ஒளிக் கீற்றை மட்டும் பார்க்கும் உயர்ந்த உள்ளம்; யார் வந்தாலும் அண்ணாவிடம் கற்ற பொறுமையுடன் செவிமடுத்து, இயன்றதைச் செய்து உதவிட எப்போதும் தயார்க் கரம்: எல்லா நிகழ்வுகளையும் அறிந்திருந்தாலும், எதையும் அறியாததைப் போல — ஆர்ப்பாட்டம் காட்டாத அமைதிக் குணம்; இளையோரிடத்தும் பெரியார் காட்டும் பணிவு; கழகத்தின் மீதும் கலைஞரின்மீதும் எல்லையற்ற ஈடுபாடு; இலட்சியங்களைத் தூக்கிப் பிடிப்பதில் ஆயுதம் ஏந்தாத அற்புதப் போராளி; அவர்தான் அண்ணன் முரசொலி செல்வம் !

**அவர் மறைந்து விட்டாராமே ! நம்ப முடியவில்லையே ! இயற்கை எய்தும் தருணத்திலும், மரண வேதனை யார் கண்ணிலும் பட்டுத் துன்பம் கொண்டுவிடக் கூடாது என்பதற்காகப் போர்த்திக் கொண்டிருந்தாராமே !**

அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடன் பழகியவர்கள் பல்லாயிரம் பேர்; அவர் தொடர்பில், ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத ஒவ்வொரு நிகழ்வு உண்டு !

**"முரசொலி" என்ற மகுடத்துடன் பெயர் கொண்டவர்கள் இருவர்; ஒருவர் முரசொலி மாறன், மற்றொருவர் முரசொலி செல்வம். முரசொலியின் தாயாம் முத்தமிழறிஞர் கலைஞர் தந்த உரிமையினால் அந்த உறவு !**

**அந்த உறவு எங்கேயோ போய்விட்டதே !**

கையறு நிலையில் மட்டுமா நாங்கள் ? இல்லை, இதயம் அறுந்த நிலையில் இங்கே !

— **கி.இராஜமாணிக்கம்** —

முரசொலி செல்வம் மறைவு

# திராவிடர் இயக்கத்திற்கே பேரிழப்பு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இரங்கல்!



சென்னை, அக்.12 -

முரசொலி செல்வம் அவர்களின் மறைவு திராவிடர் இயக்கத்திற்கே ஓர் பேரிழப்பாகும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான, முரசொலியை அரை நூற்றாண்டு காலம் தன் தோளில் சுமந்தும், அறிவார்ந்த கட்டுரைகளால் முரசொலியை செழுமைப்படுத்தியும் அரும்பணியாற்றிய முரசொலி செல்வம் அவர்கள் இன்று (10.10.2024) இயற்கை அடைந்தார் என்ற துயரச் செய்தி கேட்டு திடுக்கிட்டுப் போனேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை கல்லூரி மாணவர்களின் பாசறையாக உருவாக்கி எண்ணற்ற இளைஞர்களை மொழி உரிமை காக்கும் போராளிகளாக வார்ப்பித்து அண்ணாவும், கலைஞரும் கண்ட கனவை நனவாக்கும் பணியில் முழு மூச்சுடன் செயல்பட்ட திராவிட இயக்க கொள்கை வேழம்தான் முரசொலி செல்வம் ஆவார்.

'சிலந்தி' என்ற புனைப் பெயரில் கருத்துச் செறிவு மிக்க கட்டுரைகளை அண்மைக்காலமாக தொடர்ந்து எழுதி வரும் முரசொலி செல்வம் அவர்கள், மறைவதற்கு முன்பு கூட முரசொலிக்கு கட்டுரை எழுதுவதற்கான குறிப்புக்களை தயார் செய்து கொண்டு இருக்கும் போதே, உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர் மரணத்தை சந்தித்திருக்கிறார்.

முரசொலி வளர்ச்சிக்கும், தி.மு.கழகத்தின் எழுச்சிக்கும் அரும்பாடுபட்ட முரசொலி செல்வம் அவர்கள் திரைப்படத்துறையிலும் முத்திரை பதித்த சாதனைகளை நிகழ்த்தியுள் ளார்.

### கூண்டில் ஏற்றி விசாரிக்கப்பட்டார்!

அண்ணா திமுக அரசு நடைபெற்ற காலத்தில் முரசொலி மீது அடக்குமுறை ஏவிவிடப்பட்டு சட்டமன்றத்தில் உரிமை மீறல் பிரச்சனை எழுப்பப்பட்டு ஜனநாயகத்தின் மீதான தாக்குதலை அரங்கேற்றியபோது முரசொலி செல்வம் அவர்கள் கூண்டில் ஏற்றி விசாரிக்கப்பட்டார். அஞ்சா நெஞ்சுடன் அந்த நிலையிலும் அறிவார்ந்த வாதக்கணைகளை அப்போது தொடுத்து ஆட்சியாளர்கள் அளித்த தண்டனையை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்ட கொள்கைச் சிங்கம்தான் முரசொலி செல்வம் ஆவார்!

கடந்த காலங்களில் அவருடன் பழகிய நினைவுகள், முரசொலி செல்வம் அவர்கள் என் மீது அன்பு காட்டிய பல நிகழ்வுகள் பசுமையாக இந்நேரத்தில் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. சட்டக்கல்லூரியில் நான் பயின்று கொண்டிருந்த போது நடைபெற்ற மாணவர் தேர்தலில் என்னை போட்டியிட வலியுறுத்தி எனக்காக தேர்தல் பணிகளிலும் முழுமையாக முரசொலி செல்வம் அவர்கள் ஈடுபட்டதை, இந்த வேளையில் நான் எண்ணிப்பார்க்கிறேன்.

### நட்பு பாராட்டும் குணம் கொண்டவர்!

எவரிடமும் அதிர்ந்து பேசாத பண்பாளர் அவர். அனைவரிடமும் இன்முகத்துடன் நட்பு பாராட்டும் குணம் நிறைந்தவர் அவர். பொதுவாழ்க்கையில் உதாரண புருஷராக விளங்கி அனைவரையும் வியக்க வைத்தவர் அவர். அறிவாற்றல், கடும் உழைப்பு, எதிர்ப்பு கண்டு அஞ்சாமை ஆகிய பண்பு நலன்களுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோர்களுக்கு தோன்றாத் துணையாக தொண்டாற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன் போர்வாளான முரசொலி ஏட்டையும் காப்பாற்றி வந்ததில் பெரும்பங்கு முரசொலி செல்வம் அவர்களுக்கு உண்டு.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் என அனைத்து களங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வாகை சூடி வரும் இந்த நேரத்தில், சங்பரிவார் கூட்டத்திற்கு தமிழ்நாட்டில் கடுகளவும் இடமில்லை என்று நாற்பதுக்கு நாற்பது நமது அணி வெற்றிபெற்றுள்ள இந்த நேரத்தில், இமயக் கொடுமுடியான காஷ்மீரத்திலும் நாம் வெற்றியை சந்தித்துள்ள இந்த நேரத்தில் முரசொலி செல்வம் அவர்களின் எதிர்பாராத மறைவு நம்மை சோக வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்கிறது.

முரசொலி செல்வம் அவர்களின் மறைவு, முரசொலி ஏட்டிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மட்டுமல்ல, திராவிடர் இயக்கத்திற்கே பேரிழப்பாகும். அவரது பிரிவுத் துயரால் வேதனையில் துடிக்கும் தமிழக முதல்வர், தி.மு.கழக தலைவர், சகோதரர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முரசொலி செல்வம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் சகோதரி செல்வி அவர்களுக்கும் முரசொலி செல்வம் அவர்களின் அன்பு மகள் ஜோதிமணி அவர்களுக்கும், முரசொலி நிர்வாகிகள் வாசகர்கள் ஆகியோருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சக்கணக்கான தொண்டர்களுக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியை கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முரசொலி செல்வம்

# துணிச்சல்மிக்க எழுத்தாளர் - பண்பாளர்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் – கே.பாலகிருஷ்ணன் புகழாரம்!



சென்னை, அக்.12-

முரசொலி செல்வம் அவர்கள் மறைவு செய்தியறிந்ததும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலி இதழின் ஆசிரியரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவருமான முரசொலி செல்வம் அவர்கள் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்கிற செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. அவரது மறைவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்தமிழ்நாடு மாநில செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கலைஞர் அவர்களுடன் இணைந்து பணியாற்றியதோடு சுமார் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக முரசொலி பத்திரிகைக்கு பங்களிப்பு செய்தவர் முரசொலி செல்வம் அவர்கள். முரசொலி நாளிதழில் ஏராளமான அரசியல் கட்டுரைகளை தொடர்ந்து எழுதியவர். மாநில உரிமைகள், கூட்டாட்சி தத்துவம், அரசியலமைப்பு சாசனம் ஆகியவற்றை பாதுகாக்கவும், மதவெறி கொள்கைகளுக்கு எதிராகவும் தனது எழுத்துக்கள் மூலம் உறுதியாக போராடியவர். துணிச்சல்மிக்க எழுத்தாளர், கட்டுரையாளர், அதிர்ந்து பேசாத பண்பாளர். பழகுவதற்கு இனிமையானவர். அவரது மறைவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், ஜனநாயக இயக்கத்திற்கும், பத்திரிகை உலகிற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவரது மறைவால் துயருற்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் முரசொலி செல்வம் அவர்களது மனைவி செல்வி மற்றும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அணிகளுக்கும் முரசொலி நிறுவன ஊழியர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# திராவிடக் கொள்கைத் தூண் முரசொலி செல்வம்!

## ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் – இரா.அதியமான் இரங்கல்!



சென்னை, அக். 12 -

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிடச் சிந்தனை படிக்கட்டுகளில் ஒன்றான முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியரும், நேற்று வரை கொள்கைப் பகையாளர்களுக்கு கருத்துச் சவுக்கடி தந்த எழுத்தாளரும் பத்திரிக்கையாளருமான முரசொலி செல்வம் (82) அவர்கள் மறைவுற்ற செய்தி அதிர்ச்சி அளிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை தனது மிகுந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கிறது. மறைந்த முரசொலி செல்வம் அவர்கள் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

அதோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மகள் செல்வி அவர்களின் கணவரும் கூட.

மிகவும் அமைதியாக இருந்து கொண்டு தி.மு. கழக இயக்கத்தின் ஆக்கப் பணியினை செய்தவர் முரசொலி செல்வம் அவர்கள்.

திராவிடக் கொள்கை ஏடான முரசொலியில் வெளிவரும் 'சிலந்தி' என்கிற கட்டுரை பகுதியிலே கொள்கைப் பகையாளர்களுக்கு தக்க பதிலடியை சமரசமின்றி எடுத்துரைப்பவர்.

அதுமட்டுமில்லாமல் முரசொலியிலே வருகிற பெட்டிச் செய்திகள் மூலம் அன்றாட அரசியல் நிகழ்வுகளை உலகறியச் செய்பவரென்றால் அது முரசொலி செல்வம் அவர்கள் தான். எந்தவொரு விளம்பரத் திற்கும் ஆட்படாமல் ஒரு பெரிய இயக்கத்தினுடைய அடிக் கட்டுமானமாக இருந்து செயல்பட்டவர்.

திராவிடச் சிந்தனைகளை தன் எழுத்தால் பரவச் செய்ததில் பெரும் பங்கு வகித்தவர்.

50 ஆண்டு முரசொலிக்கு மிகப் பெரும் தூணாக இருந்தவர். அரசியல் மட்டுமின்றி திரைத் துறையிலும் கால் பதித்து பல திரைப்படங் களையும் தயாரித்து இருக்கின்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் குழந்தையான முரசொலியிலே நிர்வாக ஆசிரியராக பொறுப்பேற்றதிலிருந்து கொள்கைப் பகைவர்களுக்கு திராவிட சிந்தனையால் சனநாயகக் குரல் மூலம் எடுத்துரைத்த மரியாதைக்குரிய முரசொலி செல்வம் அவர்கள் மறைந்தது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் இழப்பல்ல.

பத்திரிக்கை துறைக்கும் எழுத்துத் துறைக்கும் கொள்கைத் தூணாக இருப்பவர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

மறைந்த முரசொலி செல்வம் அவர்களை இழந்து வாடும் கலைஞர் அவர்களது குடும்பத்தார்க்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும். மற்றும் சகோதரி செல்வி அவர்களுக்கும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் தனது அறிக்கையில் தெரிவித்தார்.



மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் பௌத்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் 144 பேர் நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணிக்கு நாக்பூரில் அமைந்துள்ள தம்மசக்கர பரிவர்த்தன தீக்ஷா பூமி வழிபாட்டுத் தலத்திற்கு முதல் முறையாக தமிழ்நாடு அரசு ஏற்பாட்டில் முதலமைச்சர் ஆணையுடன் புறப்பட்டனர். அவர்களை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி., சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு பௌத்தர்கள் சங்க பேரவையின் ஒருங்கிணைப்பாளர் கௌதம சன்னா., திருநாவுக்கரசு., மாநில சிறுபான்மை ஆணையத்தின் உறுப்பினர் வழக்கறிஞர் எஸ். வசந்த் ஆகியோர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து பக்தர்களை அனுப்பி வைத்தனர்.

தி.மு.க.வில் மிகுந்த கொள்கைப் பிடிப்போடு பணியாற்றியவர்

# முரசொலி செல்வம் மறைவு - பேரதிர்ச்சியாகும்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – இரா.முத்தரசன் இரங்கல்!



சென்னை, அக்.12 -

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராய், முதலமைச்சராக விளங்கிய கலைஞர் அவர்களின் சகோதரி மகனும், முரசொலி மாறன் அவர்களின் சகோதரர் முரசொலி செல்வம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி பெரும் துயரச் செய்தியாகும்.

முரசொலி செல்வம் அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக முரசொலியில் முழுப்பொறுப்பேற்று அதன் ஆசிரியராக, கட்டுரையாளராக பணியாற்றி வந்தவர். முரசொலியின் சார்பில் சிறப்பு மலர்கள் வெளியிடுகின்ற போது, கட்டுரை கேட்டு கடிதம் அனுப்புவது மட்டுமின்றி, தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கட்டுரை கேட்பதும், மீண்டும், மீண்டும் நினைவூட்டி பேசுவதும் இன்றும் பசுமையாக நினைவில் உள்ளது. தி.மு.க. வில் மிகுந்த கொள்கை பிடிப்போடு பணியாற்றியவர்.

அனைவரிடத்திலும் அன்பொழுக பழகக் கூடிய சிறந்த பண்பாளர். அதிர்ந்து பேசாத தன்னடக்கமிக்கவர்.

அவரது எழுத்துப் பணிகள் மரணத் தருவாயிலும் தொடர்ந்துள்ளது.

கட்டுரைகள் எழுத குறிப்புகள் எடுத்து வைத்து விட்டு கண்அயர்ந்த நிலையில் இயற்கை எய்தினார் என்கிற துயரச் செய்தி நம்மை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

அவரது பிரிவு அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அன்னார்க்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அஞ்ச லியை தெரிவித்துக் கொள்கிறது.

அவரது பிரிவால் துயருற்றுள்ள, குறிப்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், குடும்பத்தார்க்கும், திராவிட முன்னேற்ற கழக தோழர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முரசொலியின் மூலம்

# காகிதத்தை ஆயுதமாய் மாற்றிய வித்தகர் முரசொலி செல்வம்!

## புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் இரங்கல்!



சென்னை, அக்.12 -

புதிய நீதிக்கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் விடுத்துள்ள இரங்கல் வருமாறு:-

முரசொலி செல்வம் தன் எழுத்துக்களால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வலு சேர்த்தவர். திராவிடச் சிந்தனைகளுக்கு முரசொலியின் மூலம் ஓங்கி ஒலிக்கும் குரலாய் தன் எழுத்துக்களை விதைத்தவர்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாய் முரசொலியோடு நகமும், சதையுமாய் வாழ்ந்தவர். வீட்டைக் காட்டிலும் முரசொலியில் அதிக நாட்களை கழித்தவர்.

கட்சிப் பொறுப்புகளை ஏற்காமல் கட்சியின் வளர்ச்சிக்கு பக்கபலமாய், தக்கத் துணையாய் நின்றவர்.

காகிதத்தையே ஆயுதமாய் மாற்றும் எரிமலை எழுத்துக்களை விரல் வழியே காகிதங்களில் வடித்தவர். அவரின் பங்கு எழுத்துலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கலைஞர் அவர்களால் வியந்து பாராட்டும் வண்ணம் திறமை கொண்டவர். அன்பும்,பண்பும்,பாசமும் கொண்டு அனைவருடனும் அன்பாக பழகும் மனிதநேயர். நானும் அண்ணன் செல்வமும் 40ஆண்டுகால நண்பர்கள். நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து பேசிக் கொள்வதுண்டு. அந்த நினைவுகள் நெஞ்சில் இன்னும் நிழலாடுகின்றன. எனவே நானும் ஒரு அண்ணனை இழந்த துயரத்தை அனுபவிக்கிறேன். அவரை இழந்து வாழும் அவரது துணைவியார் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை புதிய நீதிக் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.